காஞ்சி

# நாடு



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
15 மே 1994
எழும்பூர், சென்னை-600 008

Dear brother,

Go to the people.
Live among them.
Learn from them.
Love them.
Serve them.
Plan with them.
Start with what they know.
Build on what they have.

2277

ACC-TNAL
03380

JL
௱2112, N92KN
N94.1.17
217217.

சிறப்பாசிரியர்:
டாக்டர். சி.என்.ஏ. பரிமளம்.

# அண்ணா பற்றாளர்களுக்கு வேண்டுகோள்

## பேரறிஞர் அண்ணாவின் நூல்கள்

### தொகுப்பு - திட்டம்

பேரறிஞர் அண்ணாவின் நூல்கள், கதைகள், கட்டுரைகள், நாடகங்கள், தம்பிக்குக் கடிதங்கள், மிக சிறந்த முறையில் என்றென்றும் போற்றி பாதுகாக்கின்றன வகையில் 700 பக்கங்களுக்கு குறையாமல் நல்ல தரமான தாளில், வண்ண அட்டையுடன் வெளிவர இருக்கிறது. முதல் தொகுப்பு விரைவில் வெளிவருகிறது. ஒரு தொகுப்பின் விலை ரூ. 150/- பதினைந்து தொகுப்புகள் வர இருக்கின்றன. ஒரு திங்களுக்கு ஒரு தொகுப்பு என்கிற வகையில்! ரூ 150/- முன் பணம் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும், 1000 புத்தகங்கள் மட்டும் வெளியிட திட்டமிட்டுள்ளோம். ஆகையால் விரைவில் உங்கள் பெயரை பதிவுசெய்து கொள்ளவும்

---

பின்குறிப்பு: காசோலை பணவிடை அனுப்பவேண்டிய முகவரி,

**பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவை,**

7. அவின்யூ சாலை,

சென்னை - 600 034.

தமிழ் நாடு,

தென் இந்தியா.

---

விளம்பரக் கட்டணம் — காஞ்சிநாடு

அரைப்பக்கம்-ரு 250 அட்டை (உள்ளே) 750 முழுப்பக்கம் ரூ 500, அட்டை (வெளியே) 1000,

காஞ்சி நாடு: உறுப்பினர் ஆகிவிட்டீர்களா?

உங்கள் உறுப்பினர் கட்டணத்தை புதுப்பித்து விட்டீர்களா?

# காஞ்சி நாடு

மலர்—1 7—2—94 இதழ்—17

திருவள்ளுவர் ஆண்டு 2025 கும்பம் (மாசி)

பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவையின் திங்கள் இதழ்


# இந்தி

தமிழ்நாட்டில் இந்தியை புகுத்துவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து மத்திய அரசு செயல்பட்டு வருகிறது. தமிழர்கள் என்றைக்கும் இந்தியை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதை தெரிவிக்கிற முறையில் கட்சி பாகுபாடு மறந்து தமிழர்கள் ஒன்று கூடி எதிர்ப்போம். அண்ணா நினைவுநாளில் நமது வேண்டுகோளும், பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவையின் எண்ணமும் இது தான். நாடு, மொழி, இனம் இவைகளுக்கு ஊறுநேருகிற போது தமிழர்களே ஓர் அணியில் திரள்வீர்.

மனித மேம்பாடே என் இயக்கம்!

தோழமையே என் மேடை!

—அறிஞர் அண்ணா



'தமிழுக்கு ஆபத்து வருகிறது என்று அறிகின்ற போது - ஆபத்து வருமோ என்று ஐயம் தோன்றும் போது — ஆப த்து வரக்கூடுமோ என்ற சந்தேகம் வரும் போது தமிழர்கள் ஆர்த்தெழுகிறார்கள்.

''இந்தி எதிர்ப்புக்குப் பிறகுதான் தமிழார்வம் பெருகிப் புதுப்புது கவிஞர்கள் - புலவர்கள் — புதுப்புது பொருளை ஆராய்ந்து வெளியிடுகிறார்கள். நல்ல உரைநடையாசிரியர்கள்— மொழிப் பெயர்ப்பாளர்கள் — பேச்சாளர்கள்தொகை ஓங்கி வளர்ந்தது; ஓங்கி வளர்ந்தபடி இருக்கிறது.

எதற்கு ஆபத்து என்றால்தான் அதற்குப் பாதுகாக்கும் - உணர்ச்சியும் தோன்றுகிறது.

இன்றைய தினம் தமிழுக்குக் காவலர் தேவை! காத்து நிற்பவர்கள் தேவை!

''தமிழார்வம் வளர்கிற நேரத்தில் அதற்குச்சுவையும் பயனும் ஊட்டி அதை வழிகாட்டி அழைத்துச் செல்ல வேண்டும் தமிழ்ப்புலவர்கள்! அத்தகை வழிகாட்டிடும் திறன் மிக்கவர்கள் பலர் உண்டு என்பதை ஒப்புக்கொள்கிறேன்! ஆனால் எங்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்பதை புலவர்கள் தெரிந்து கொள்வது நல்லது!''

உலகத் தமிழ்நாட்டில் முதலமைச்சர்
பேரறிஞர் அண்ணா

---



''ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன்பே 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற திருக்குறள் இருந்தபோதே நாலுவர்னம் நமக்குள் புகுத்த மார்க்கம் என்ன? அந்தக் கொள்கை வந்த போது எதிர்த்தவர்கள் எத்தனை பேர்? வந்தது வரட்டும் என இருந்தனரா வந்ததுபோதும் இனி வேண்டாம் என்றனரா? வந்ததுவந்து தொலைக்கட்டும் என்று அலுத்தனரா? வந்தது அதிகநாள் இருக்காது என நினைத்தனரா?



21727
சென்னை-600 008

''ஒன்றேகுலம்; ஒருவனே தேவன் என்ற உன்னதக் கொள்கைக்கும் நாமே உரியவர்கள்.

''ஆண்டவன் பத்து அவதாரம் எடுத்தான் என்பதற்கு பாடல் எழுதுபவர்கள் நாம். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற கொள்கைக்கும் நாம் வாரிசு என்று நீண்ட நாளைக்கு பலசரக்கு நடத்த முடியாது ஏதாவது ஒரு சரக்கைத்தான் ஒழுங்காக விற்க வேண்டும். அந்தச் சரக்கு நாணயமானதாக, மக்கள் வாங்கக் கூடியதாக, உலகம் ஒப்புகிற சரக்காக இருக்க வேண்டும்.''

அதற்கு தமிழ்ப் புலவர்களும் தமிழறிஞர்களும் பாடுபட வேண்டும்.

உலகத்தமிழ்மாநாட்டில்
முதலமைச்சர்
பேரறிஞர் அண்ணா

---

# ANNA ADORED

## Adored for Great qualities

"A person of cheerful disposition, 'Anna' a popular figure was adored for his great qualities of head and heart. He had the pulse of the people and was always concerned with the improvement and well-being of the common man"

"A forceful orator, Anna was an outstanding Parliamentarian".

**V. V. GIRI**

## A Dedicated Leader

**"Mr. Annadurai gave Tamil Nadu a dedicated leadership and made e valuable contribution to the evolution of harmonious relation between the Centre and the State".**

INDIRA GANDHI

**"Anna has always risen above party and state conside rations to meet the needs of counrry".**

Jagjivan Ram

"Anna is a great leader of the people, a profound scholar, a man of character aud a finiahed spehker".

**K. SUBBA RAO**
Former Supreme Court Chief Justice.

## Our Great Leader

Our great leader, Anna, had made history by his unstinted service to the people and Tamil language; with kind and tender heart like that of a mother he held sway over the youth of Tamil Nadu and in effect was their unquestioned teader. He stood for establishment of democratic way of life anb socialistic pattern of society. His speeches and writings had initiated an era of Renaissance throughout rhe Tamil speaking world."

Dr. M. KARUNANIDHI

**"Anna has given a new vigour to modern Tamil by the creation of a new stale...... He is a great creative writer and an orator of the first rank"**

—Prof. T.P. Meenakshi Sundaram
Former Vice-Chancellor,
Madurai University

**"Anna sald that he was not a scholar. But the literary interpretoin he gave for a song from Manimekalai proves undoubtedly that he is e great scholar"**

**Dr. M. Varadaiajan.**

**"In any company in which he found himself, Mr. Anna durai was always facile princeps (the acknowledged/ chief)".**

**-Prof. R. Krishnamurthy,**
**Anna's English Professer.**

(தொடர்ச்சி 31-ம் பக்கம் பார்க்க)

# மாநில சுயாட்சி

— பேரறிஞர் அண்ணா

1968 ஜூலைத்திங்கள் 20-ம் நாள் சென்னையில் நடைபெற்ற தமிழரசுக்கழக 5-வது மாநில சுயாட்சி கருத்தரங்கில் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் தலைமையில், மாநில சுயாட்சிக் கொள்கையின் இன்றியமையாமைபற்றி பேரறிஞர் அண்ணா, காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப், (இந்திய முஸ்லீம் லீக் தலைவர்); திரு. ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாத் (பொது உடமைக் கட்சி, அன்றைய கேரள முதல்வர்); திரு. கலியாணசுந்தரம் பொது உடமைக்கட்சி) ஆகியோர் சொற்பொழிவாற்றினார்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கருத்துரை:-]

மாநில சுயாட்சி வேண்டும் என்று நாம் கேட்கிறபோது காமராசரும், சுப்பிரமணியமும் இப்படிப் பேசுவது மத்திய அரசைக் குலைப்பதாகும்; நாட்டுக்கு பெரும் ஆபத்து வரும் என்று கூறுகின்றனர். இது பற்றிய எனது விளக்கத்தைக் கூறு முன்பு அவர்களிடம் பணிவன் போடும் உறுதியோடும் கேட்டுக்கொள்வேன். நாட்டுக்கு ஆபத்து வரும் என்று அறிந்து கூறவும் நாட்டை வலிமையுள்ளதாக ஆக்கும் உரிமையும், வழிகாட்டும் உரிமையும் உங்களைத் தவிர வேறுயாருக்கும் இல்லை என்று நினைத்துப் பேசிட முழு உரிமை யாரால், எந்தக் காரணத்தால், எப்போது உங்களுக்கு அளிக்கப்பட்டது?

குழந்தை தெருவில் சென்றால் கார் வந்து மோதிவிடும், அதற்கு ஆபத்து வரும் என்று உணர்ந்து அந்தக் குழந்தையைக் காப்பாற்றிட எல்லோருக்கும் உரிமை உண்டு; தேவையுமுண்டு. ஏதோ நாங்கள் பாதை தவறியவர்கள் போலவும், அவர்கள், தான் காப்பாற்றும் உரிமை படைத்த பாதுகாவலர் போலவும் பேசுவது ஏன்?

காங்கிரஸ் தலைவர்கள் இப்படிப் பேசுவது 15 ஆண்டுகளுக்கு முன் அனுமதிக்கப்பட்ட தவறாக இருக்கலாம். இருபது ஆண்டுகளுக்கு முன் மக்களுக்கு இவையெல்லாம் புரியாத காரணத்தால் சரி என்று கூட ஏற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் விழிப்படைந்த இந்தக் காலத்தில் கூட அப்படிப் பேசுவது ஆணவத்திற்கு எடுத்துக்காட்டு என்று தான் உலகம் கருதும்! நாட்டுக்கு ஆபத்து என்பதை உணரும் சக்தி எங்களை விட சுப்பிரமணியத்துக்குத்தான் உண்டு எனக் கூறுவது எந்த நியாயத்தின் அடிப்படையில் எழுந்தது?

நாட்டைக் கட்டிக் காப்பதில் ம.பொ. சிவஞானத்திற்கு உள்ள உறுதியை விட காமராசருக்கு உறுதி அதிகம் என்பது எந்த நியாயத்தின் பாற்பட்டது?

காங்கிரஸ்காரர்களைத் தவிர நாட்டின்மீது மற்றவர்களுக்கு அக்கறை இல்லை என்பது பொருளற்றது; பொருத்தமற்றது; ஒதுக்கித் தள்ளப்பட வேண்டியது.

பலமான மத்திய அரசு வேண்டும் என்று கூறுகின்றார்கள். மத்திய அரசுக்கு பலம் எதற்காக? அந்த பலம் யாருக்கு எதிராக என்பதையும் நாம் சிந்தித்துப் பார்த்திட வேண்டும்.

## வலிவு தேடித்தரத் தயார்!

பலம் என்பது தனிப்பட்ட ஆளுக்கு இருக்கலாம்; தனிப்பட்ட அமைப்புக்கு இருக்கலாம்; மாநில துரைத்தனத்திற்கு இருக்கலாம். ஆனால் அந்தப் பலம் யாருக்காக எதற்காக ஏற்படுத்துவது என்பது பற்றி விளங்கிக் கொள்ளாமலும் விளக்கிச் சொல்லாமலும், பேசிக் கொண்டிருக்கின்றனர்.

சீனாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக மத்திய அரசுக்கு வலிவு தேவை என்றால் ஒரு துளியும் தயக்கமில்லாம் அந்த வலிவை தரத் தயார்! பாக்கிஸ்தான் படையெடுப்பை அடக்க மத்திய அரசுக்கு வலிவு தேவை என்றால் நிச்சயம் அந்த வலிவைத் தேடித்தரத் தயார்!

ஆனால் மத்திய அரசின் வலிவு அசாமிற்கு அச்சத்தைத் தர, தமிழ்நாடு தத்தளிக்க, கேரளத்திற்குக் கலக்கம் தருவதற்குத்தான் என்றால், நமது சிந்தனையைச் சிறுகச் சிறுக அழித்து, சிந்திக்கும் திறனே இல்லாமல் ஆக்குவதற்குத்தான் என்றால், நமது கூட்டுச் சக்தியின் மூலம் நம்மில் ஒவ்வொருவருடைய வலுவையும் கொண்டு, அந்த அக்ரம வலிவை சிறுகச் சிறுகக் குறைப்பதுதான் எங்கள் கடமையாக இருக்கும்.

உள்ளபடியே பலமான மத்திய அரசு இருந்தால் காங்கிரஸ் காரர்களாவது காப்பாற்றப்படுவார்களா என்பதை அவர்கள் கொஞ்சம் நிதானத்துடன் சிந்திக்கவேண்டும்.

## சரிந்த சாம்ராஜ்யங்கள்

மத்திய அரசு பலமாக இருந்தது குப்த சாம்ராஜ்யத்தில்! மத்திய அரசு பலமாக இருந்தது மொகலாய சாம்ராஜ்யத்தில்! மத்திய அரசு

பலமாக இருந்தது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில்! ஆனால் இன்று அந்த சாம்ராஜ்யங்கள் எங்கே?

சரிந்த சாம்ராஜ்யங்களுடன் இப்போது இருக்கின்ற சாம்ராஜ்யத்தை ஒப்பிடுவதற்கு உள்ளபடியே வருத்தப்படுகின்றேன். அந்த சாம்ராஜ்யவாதிகள் தமது சாம்ராஜ்யங்களுககு அதிகமான வலிவு தேட முயற்சி செய்த ஒவ்வொரு நேரத்திலும் சரிவுதான் ஏற்பட்டது என்பதை சரித்திர முணர்ந்தவர்கள் அறிவார்கள்.

ஔரங்கசீப் காலத்தின் வலிவான மத்திய ஆட்சிக்கு ஒப்பான மத்திய ஆட்சியை சரித்திரத்தில் காணமுடியாது. ஆனால், அந்த சாம்ராஜ்யம் என்ன ஆயிற்று என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நமக்கிருக்கிற கவலை எல்லாம் தூக்க முடியாத பாரத்தை மத்திய ஆட்சியினர் விரும்புகிறார்களே என்பதுதான்!

மத்திய அரசின் வலிவு என்பது மாநிலங்கள் ஒவ்வொன்றின் தனித்தனி வலிவையும் கூட்டியதால் ஏற்பட்ட மொத்த வலிவுதான் என்றால் வாதத்திற்கும் ஏற்றது: அரசியலுக்கும் நலல்து; காரியத்திற்கும் உகந்தது.

மாநில அதிகாரங்களை எல்லாம் எடுத்து மத்திய அரசு குவித்து வைத்துக்கொள்வதால்; மாநிலங்கள் பலகீனமடையும் என்பது மட்டுமல்ல; மத்திய அரசுக்கென்று புதிய வலிவு ஏதும் ஏற்பட்டுவிடாது.

உனக்கு வலிவு வேண்டாம்; என்னிடமே இருக்கட்டும்; உனக்கு எது தேவையோ அதை என்னிடம் கேள் என்று மத்திய அரசு கூறுவது 80 வயதான பிறகும் பெட்டிச் சாவியை வெள்ளி அரைஞாண் கயிற்றில் கட்டிக்கொண்டு, படுக்கும் போது கையை சாவிகொத்தில் வைத்துக் கொண்டு திரும்பித் திரும்பிப் படுத்து, சாவி நம்மிடம் இருப்பதால் பிள்ளைகள் பெட்டியைத் திறக்க மாட்டார்கள் என்று தவறாக எண்ணும் வயோதிகரின் நினைப்பைப் போன்றது தான்!

எல்லா அதிகாரங்களையும் தாங்கள் தாங்கக்கூடியவர்கள் என்ற நம்பிக்கை இருந்தாலாவது அவர்களிடம் எல்லா அதிகாரங்களையும் தரலாம். ஆனால் வஞ்சகத்திற்கு இடமில்லாமல் நெஞ்சில் கைவைத்து. காங்கிரஸ்காரர்கள் கூறட்டும்! இந்தியா முழுவதும் ஒப்புக்கொள்ளப் பட்டவர் - எல்லா இடங்களிலும் தனது செல்வாக்கைச் செலுத்தக் கூடிய நேரு போன்ற அகில இந்திய தலைவர்கள் எத்தனைபேர் காங்கிரசில் இருக்கிறார்கள்! இப்படிக் கேட்பது காங்கிரஸ்காரர் களுககு வருத்தமாகக் கூட இருக்கும்! கோபம் கூடவரலாம்; உண்மையைச் சொல்லுகிறேன் என்று!

நேருவுக்குப் பிறகு இந்தியா முழுமையும் கட்டி ஆளும் திறன் படைத்தவர்கள் என்ற நம்பிக்கையை இந்த நாட்டிலும் வெளி நாட்டிலும் ஏற்படுத்தியவர், அவரைப் போல் ஒருவர் இப்போது இருக்கிறாரா என்று காங்கிரஸ்காரர்கள் கூறட்டும்! அவர்கள் எந்தப் பொரைச் சொன்னாலும் அதை நம்புவதற்கு அவர்களிலேயே சிலர் தயாராக இல்லை.

நேரு அதிக அதிகாரங்களைக் கேட்பது தவறாக இருந்தாலும்-அவர் தாங்கக்கூடியவர் என்ற நினைப்பில் அதிக அதிகாரங்களை மக்கள் தரத் தயாராக இருந்தார்கள். ஆனால், அவ்விதம் தாங்கக் கூடியவர்கள் இல்லாத இந்த நேரத்தில் எப்படி அதிக அதிகாரங்களைத் தர முடியும்?

அதிகார வலிவு என்பது செய்யும் வேலைக்கேற்ற வலிவாக இருக்கவேண்டுமே தவிர, பாங்கியில் போடப்பட்ட பணம் போல் கருதக்கூடாது.

நாட்டுப் பாதுகாப்புத் தவிர, மற்ற அதிகாரங்கள் அனைத்தும் பற்றிச் சிந்திப்போம்; மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்களை மாநிலங்கள் எடுத்துக் கொள்ளட்டும். பின்னர் மாநிலங்கள் விரும்பித்தருகின்ற மீதியுள்ள அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக் கொள்ளட்டும்.

'தொடரும்'

---

தம்பி! அந்த மனிதத்தன்மையிலேதான் முழுக்க முழுக்க நம்பிக்கை கொண்டிருக்கிறேன். மனிதத்தன்மைதிகழ்ந்திடச் செய்வதைக் காட்டிலும் மகத்தான வேறோர் வெற்றி இல்லை என்றே கருதுகிறேன். அரசுகள் அமைவதே, இந்த மனிதத்தன்மையின் மேம்பாட்டினை வளர்த்திடத்தான் என்று கருதுகிறேன். என்னால் எந்தப்பிரச்சினையும் மனிதத்தன்மை கலந்ததாக மட்டுமே கொள்ள முடிகிறது. அதனால் கொடுமை நேரிட்டுவிடும் போது குமுறிப்போகிறேன். அக்ரமம் நடைபெற்றிடும்போது நெஞ்சில் வேல்பாய்கிறது.

— காஞ்சி 1969. ப. 2.

---

# இறகு

அன்பின் உருவே!

அழகின் ஆரம்பம் எனக்குத் தெரியாது-

உன்னைப் பார்த்தபோது முடிவு இப்படித்நான் இருக்கு மென்று புரிகிறது.

உன்னாலானவைகள் ஆயிரங்கள் இருக்கலாம்! அதிலே நானும் ஒன்று!

என்னையேன் பறவைகளின் சிறகுகளிலே இறகாக்கினாய்?
மயிலின் இறாாக இருந்திருந்தால். புள்ளி நிறங்கொண்டு

தென்றலுக்ருக் கவரி வீசி: மகிழ்ந்திருப்பேன்!

கொக்கின் இறகாக என்னை ஆக்கி விட்டாயே!

தாயே! அந்த கொக்கு ஒருநாள் வானத்தில் பறந்தது.

அது எவ்வாறெலாம் போனதோ, அவ்வாறெல்லாம் அதனைத் தூக்கிக் கொண்டு நான் செல்ல வேண்டும்.

கொக்கு என்னைத் தன் விருப்பத்திற்கேற்ப ஆட்டி வைக்க எண்ணுகிறது!

அதற்கு நான் அடிமையா அம்மா?
இறகில்லா விட்டால் - சிறகு இல்லை!
சிறகு இல்லாவிட்டால் - கொககே இல்லையே!
ஆயிரம் இறகாலானது சிறகு!
இரண்டு சிறகாலானது கொக்கு!

சிறகைத்தான் கொக்கும் கவனிக்கிறது! இறகைப் பற்றி நினைப்பதே இல்லை.

இறகு ஒன்று உதிர்ந்தாலும் பரவாயில்லை, என்று - சிறகு நினைக்கிறது!

உதிர்ந்த இறகோ, சகதியில் அழுகிறது!

இறகு இருந்த இடத்தை, இன்னொன்று நிரப்ப முடியாதல் லவா?

இறகுகள் இவ்வாறு உதிர்ந்தால், பிறகு கொக்கு பறக்க முடியாதல்லவா?

கர்வம் கூடாது தாயே, கொக்குக்கு!

நான் ஆட்டுவதாலேயே இறகாய் இருக்கின்றாய் என்றால், இழிந்த இடத்துக்கு என்னை அனுப்பாதே அம்மா!

ஒருநாள் கொக்கு உயரே பறந்தது! என்பக்கத்திலே இருந்த இறகு ஒன்று உதிர்ந்து விட்டது!

அளவுக்கு மீறிய உயரத்தில் சென்றது கொக்கு!

உதிர்ந்த இறகை அது உதாசீனம் செய்துவிட்டது!

தருணம் பார்த்துக் கொண்டிருந்த புயல், உதிர்ந்த இறகு இருந்த இடத்திலே - நுழைய ஆரம்பித்து விட்டது.

இறகுகள் மேலும் சில உதிர ஆரம்பித்தன!

பறக்க முடியாமல் கொக்கு வானத்தில் தள்ளாடியது!

நான் அப்போது அந்தக் கொக்கைப் பார்த்து நவின்றேன் -

கொக்கே! உன்னை உயர ஏற்ற இறகுகள்தானே காரணம் - என்றேனே!

ஆமாம், என்று தலையசைத்தது கொக்கு!

அதற்கு நிலை தடுமாறும் போதுதான்; என் நினைப்பே வருகிறது!

அதுபோல, ஓர் அமைப்புக்கே தொண்டர்கள் தாம் காரணமென்று என் மூலம் அறிவிக்கின்றாயா அம்மா?

கொக்கின் ஆரம்ப காலத்தில் முளைத்தது இறகு!

ஓர் அமைப்பின் ஆரம்ப காலத்திலிருப்போரும் தொண்டர்கள் தாமே!

கொக்கு, இறகின்றி பறக்காது! முடியாது!

ஓரமைப்பும் தொண்டர்களின்றி விளங்காது! செயல்பட முடியாது!

விசித்திரமானவள் நீ! என்னைக் கொண்டே அரசியலை விளக்குகின்றாயே!

அதனால்தான், நான் இறகுகளை அடக்கமாக - கவனமாக, சிறகுக்குள்மடக்கி ஒற்றுமையாக - வைத்திருக்கிறேன் என்றது கொக்கு!

தாயே! அது உன் படைப்பல்லவா? அதற்குரிய தகுதி, திறன்! அறிவு! அத்தனையும் உன்னை விட்டால் வேறு யாருக்கம்மா உண்டு? இருக்கிறது!

'தமிழஞ்சலி'
புலவர் கலைமணி

# அறிஞர் அண்ணாவின் தன் வரலாறு (18)

— Dr. சி. என். ஏ. பரிமளம் —

தம்பி!

நான் பெருமூச்செறிந்தபடி, பக்கத்தில் சம்பத்திடம் – இப்போதாவது புரிகிறதா, நான் ஏன் சங்கடப்படுகிறேன்? என்ற காரணம், என்று கேட்டேன். நாங்கள் உட்கார்ந்திருந்த இடம், சினிமாக் கொட்டகை! படம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்? காட்சி என் கருத்திலே கிளர்ச்சியுண்டாக்கி விட்டது; ஆங்கிலப்படம், டிஸ்ரேலி எனும் பிரிட்டிஸ் அரசியல் தலைவனைக் குறித்த வரலாற்றுப் பின்னணி கொண்டது.

டிஸ்ரேலி ஆட்சிமுறையைக் கண்டித்துப் பேசுகிறான். அவன் கருத்துரைக்கு ஆதரவு பெறுகிறது. ஆட்சிப் பொறுப்பே அவனிடம் தரப்படும் சூழ்நிலை உண்டாகிறது. அப்போது, அறிவாளி, ஆற்றல் மிக்கோன், எதிர்ப்புக்கு அஞ்சாதவன், எவரையும் எடுத்தேன் என்று பேசிடக்கூடிய துணிவு கொண்டோன், பிரச்சினைகளைத் துருவித் துருவி ஆராயும் திறன் கொண்டோன் என்றெல்லாம் கூறப்பட்ட டிஸ்ரேலி, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள தயங்குகிறான், தன்னால் இயலுமா என்று சிந்தித்து ஐயமடைகிறான். அச்சத்துடன் கேட்கிறான் நண்பர்களிடம், ''இந்தப் பெரும் பாரத்தை நானெப்படித் தாங்க முடியும்? என்னால் முடியுமா இந்தச் சுமையைத் தூக்கிட...'' என்று. நான் அந்தக்காட்சியைக் கண்டுதான், சம்பத்தைக் கேட்டேன். இப்போதாவது புரிகிறதா? இதோ, டிஸ்ரேலி எப்படி அச்சமடைகிறான்! பார், புதிய பொறுப்புகளை ஏற்க; காரிய மாற்ற வேண்டிய கட்டம் வருகிற போது, கவலை எப்படிப் பிறக்கிறது பார்! இதே நிலைதானே இப்போது எனக்கு ஏற்படச் செய்கிறாய். என்னால் முடியுமா? ஏன் எனக்குத் தொல்லை?'' என்று கேட்டேன்.

திராவிட மக்களுடைய வாழ்க்கைக்கே பெரியதோர் சிக்கல் ஏற்பட்டிருந்த நேரம்; பெரியாரின் திருமணம் நம்மையெல்லாம் திகைக்க வைத்த சமயம்; திராவிடர் கழகத்தைத் துறந்து, கண்ணீர் வடித்தபடி நாம் வெளியேறிய நேரம். தோழர் குருசாமி, சம்பத்துக்கு, காலத்தின் குறிகள் கடயாற்றுவதிலே உள்ள கண்ணியம், இயக்கத்தை நடத்திச் செல்ல வேண்டிய பெரும் பொறுப்பு இவைப்பற்றி எல்லாம்

உணர்ச்சிகரமான குட்டிப் பிரசங்கம் நடத்தி விட்டார். இருவரும், 'விடுதலை'யில் கூடிப் பணியாற்றிய காலம் அது.

விடாதே அண்ணாதுரையை! — என்று கூறிவிட்டார் — விட்டால் போதும் என்று காஞ்சிபுரம் ஓடிவந்து விட்டேன் நான் — சம்பத்தும் நமது இன்றைய துணைப் பொதுச் செயலாளர் நடராஜன் அவர்களுமாக வந்து, என்னைப் பிடித்துக் கொண்டனர்.

இப்போது கூட, எப்போதாவது, அந்த அறையில், பிற்பகலில் சிறிது நேரம் படுத்துறங்கப் போவதுண்டு — போகும் போதெல்லாம், எனக்கு அந்தக் காட்சி அப்படியே தெறிவது போலிருக்கிறது. ஒரு நாள் பிற்பகல், நான் படுத்துக்கொண்டிருக்கிறேன் — சம்பத்தும் நடராசனும் வந்து விட்டார்கள்.

இது சரியல்லை அண்ணா! எப்போதும் இப்படிதானா? பொறுப் பேற்கத் தயக்கமா?

இந்த நேரத்தில் நாம் கடமையைச் செய்யத் தயங்கினால், நாடு நம்மை நிந்திக்கும்.

குருசாமி, எப்படியும் தங்களைக் கையோடு பிடித்திழுத்துக் கொண்டு வரச் சொல்கிறார்.

விளையாட, இது சமயமல்ல; வேதனையை மறைக்க பொழுது போக்குகளில் மூழ்கிவிடக் கூடாது.

இருவரும் - இரட்டைப் புலவர்கள்: கவிதைகள் கொட்டுவது போல — கருத்துக்களைக் கொண்டு என்னைத் தாக்குகிறார்கள். என்ன செய்வேன்! சென்னை சென்றேன் செயலாற்ற இணங்கினேன் — ஆனால் அதே போது. பொறுப்புகளை ஏற்றுக் கொள்வதிலே எனக்கோர் அச்சம் பிடித்தப்படி இருந்தது. இந்த என் எண்ணத்தை அப்படியே சித்தரித்துக் காட்டுவது போலிருந்த, டிஸ்ரேலி படக் காட்சி எனக்குத் தூக்கி வாரிப்போட்டது; அதனால்தான் பெருமூச் செறிந்தேன் சம்பத்தை. "இப்போது புரிகிறதா என் சஞ்சலத்துக்குக் காரணம் இருப்பது?" என்று கேட்டேன், அவன் தந்த பதிலே காட்சியைக் கண்டதால் ஏற்பட்டதைவிட அதிகமாக அதிர்ச்சியைக் கொடுத்தது — உன்னிடம் சொல்வதிலே தவறு என்ன ?சிறிதளவு வெட்கம்கூடத்தான் ஏற்பட்டது சம்பத்து மட்டுமே என்னிடம் அவ்வளவு தாராளமாகவும், சரளமாகவும் பேச முடிகிறது. சம்பத்தை மட்டுமே, நான் எவ்வளவோ முயன்றாலும் கூட, அவர் இவர் என்று என்று கூறமுடிவதில்லை!

பொறுப்பேற்றுக் கொள்வதிலே உள்ள கலக்கத்தை காட்டும் காட்சியையும், அதன் மூலம் பெறப்படும் கருத்தையும் நான் என் நிலைக்குக் காரணமாகக் கொண்டு இப்போதுப் புரிகிறதா? என்று சம்பத்தைக் கேட்டேன் அல்லவா — பதில் என்ன கிடைத்தது தெரியுமா? இவ்வளவு பெரிய பாரத்தை சுமையை எப்படி நான் தாங்க முடியும்? என்றல்லவா டிஸ்ரேலி கேட்ட முறைப்படியே நான் கேட்டேன் — பதில் என்ன என்று எண்ணுகிறாய்? ''சுமையை — பாரத்தை — தாங்கப் போவது நான் ஒருவன் தான் என்று ஏன் அண்ணா! நீங்கள் எண்ணிக்கொள்கிறீர்கள்? சுமையைத் தாங்கப் போவது நாம் — நாம் உம்மீது மட்டுமல்ல பாரம் — '' என்றானே அந்தப் போக்கிரி! நான் உண்மையில் வெட்கப்பட்டேன். இவ்வியக்கத்தை நடத்திச் செல்லவேண்டிய சுமை — பாரம் — பொறுப்பு — அவ்வளவும் என்மீது மட்டுமே ஏற்படும் என்று எண்ணியதால் தானே, இவ்வளவு சுமையைத் என்னால் எப்படி முடியும் என்றக் கலக்கம் எனக்கு ஏற்பட்டது. அந்த எண்ணம் தவறானது என்பதை எடுத்துச் சொல்வதாக இருந்தது சம்பத்து அளித்த பதில் — அந்தப் பதிலிலே பொதிந்துள்ள தத்துவம், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கே அச்சாணியாக அமைந்திருக்கிறது — 'நாம்' என்பது வலிவும் பொலிவும் கொண்டதோர் தத்துவம் — 'நான் என்பது வேதாந்தத்திலேயே அதை அகம்பாவம் அல்லது மனமயக்கம் என்கிறார்கள் என்றால், அரசியலில் அது அர்த்தமற்றது மட்டுமல்ல, அனுமதிக்கப்பட்டு விட்டால் ஆபத்தைஅடுக்கடுக்காகக் கிளப்பிவிடக் கூடியதாகும்! காண்கிறோமே இப்போது கல்லறைகளை எல்லாங்கூட அல்லவா கல்லி எடுத்துக் போடுகிறார்கள் — நாம் — நான் இந்த இரு தத்துவங்களிலும் மேலானது என்பது மேகுதினிக் விளக்கிக் காட்டுகிறார்கள்.

'நான்' -என்பறு தவறு — 'நாம்' — என்பதுதான் நிலைமை என்பதை அன்று படக்காட்சிக் கொட்டகையில் கண்டதிலிருந்து, அந்தப் பொலிவும் வலிவும் பொருந்திய தந்துவம், கருத்துக்கு எவ்வளவு மாண்பளித்திருக்கிறது என்பதை மிகவும் அகமகிழவும், வாய்ப்புகள் பலப்பல வந்தவண்ணம் உள்ளன.

'நாம்' என்ற கூட்டுச் சக்தியை — குடும்ப சக்தியைக் தரக்கூடும் அந்தச் சொல்லுக்கு ஒழிலோவியமாக அமைந்து விட்டது. தி.மு.க.

நானும் நீயும் — நம்மில் ஒவ்வொருவரும் — அந்த 'நாம்' என்பதிலே இருக்கிறோம் — அதிலே இருப்பதன் மூலம் ஏற்றம் தருகிறோம் — அந்த ஏற்றம் நாட்டுக்குப் பயன்படுகிறது

'நாம்' என்ற அந்தக் கூட்டுச் சக்தியைக் காட்டும் பொலிவினுள் போதிந்துள்ள அரிய பாடம், ஜனநாயகப் பண்பாட்டிற்கே அடிப்படையாகிறது — அகில உலகிலும், எங்கு, எந்த சமயத்தில் எத்தகைய அரசியல் குழப்பமோ, அவல நிலையை விளைகிறது என்றாலும், நாம்' என்பதிலே உள்ள நிலைமையிலே ஏதோ ஓர்விதத் தூசு படிந்துவிட்டது என்று கூறலாம் — 'நான்' என்பது, 'நாம் என்பதை வலுச் சண்டைக்கு இழுக்கிறது என்று பொருள் கொள்ளலாம்.

தம்பி! 'நான்' — என்பதிலிருந்து 'நாம்' என்ற கட்டம் அமைவதற்கு, ஒவ்வோர் நாடுகளிலே, கொட்டப்பட்ட வியர்வையும் இரத்தமும், காணிக்கையும் கொஞ்சமல்ல!! எவ்வளவு 'பலி' வாங்கிய பிறகும் கூட, இன்றும் 'நாம்' அதை 'நான்' என்பது, சமயம் கிடைக்கும் போதெல்லாம் மோதிப் பார்த்திடக் காண்கிறோம்; நாடுகளிலேயுஞ் சரி, கட்சிகளுக்கு உள்ளேயுஞ் சரி, வீடுகளிலும் கூடத்தான்!!

15-4-1956 தம்பிக்கு — தொடரும்

---

# 'அண்ணா' சிந்தனை - வெற்றி

பேரறிஞர் அண்ணாவின் பெருமைகளை சில தமிழ்ப்பதர்கள் மூடி மறைக்க எண்ணினாலும் அதனை முறியடிக்கும் திறனும், திடநெஞ்சும் திமிழர்க்குண்டு என்பதை விளக்குமுகமாக அண்மைக்காலங்களில் வெளிவந்த 'அண்ணா' சிந்தனை - வெற்றிக்கு இதோ சில சான்றுகள் - இலக்கியப் பதிவுகள்.

1. ''புதிய கலாச்சாரம்'' — சன - 94
படைப்புக்கலை — மாவோ - யேனான் - உரை 'கட்டுரையில்'

''மேட்டுக்குடிக்கலைஞர்கள், பல சமூக இயக்கங்களின் கலை, கலாச்சாரப் பங்களிப்பைக்கூட தரம் தாழ்ந்ததென்றே எள்ளி நகையாடுகிறார்கள் அண்மையில் சாகித்ய அகாடமியினர் ''அண்ணா எழுதியது இலக்கியமே அல்ல'' என்ற முடிவு எடுத்திருக்கிறார்கள். .........அவர்கள் (தி.மு.க. கலைஞர்கள்) பெருவாரியான மக்களைச் சென்றடையும் இலக்கியத்தைப்பற்றிச் சிந்திக்காமல் உயர்ந்ததரம் பற்றி மட்டுமே சிந்தித்திருந்தால் பெரும் மக்கள் இயக்கமாக உருவெடுத்திருக்க முடியாது.

அவர்களின் சீர்திருத்த இயக்கத்தின் பலனை அனுபவித்து கல்வி, அறிவு, கலைநுணுக்கம் பெற்றவர்கள். இன்று பார்ப்பனர்களின்

கண்ணேப்பட்டத்திற்குத் தரவிவிட்டார்கள். அவ்வாறு 'தரமில்லாத, அந்த இயக்கம் நடந்திராவிட்டால் இவர்கள் இன்னும் ஆடு, மாடு மேய்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்!''

2. முற்போக்கு எழுத்தாளர் ''பொன்னீலனின்'' புதிய மொட்டுக்கள்'' நாவலில் ஒருபகுதி கல்பனா-அக்-79

அந்த நாவலின் கதாநாயகன் சுதந்திரராஜன்-

''ஈ.வெ.ரா. பொஸ்தகம், அண்ணாத்தொர பொஸ்தகம்னு பல பொஸ்தகங்களும், பத்திரிக்கைகளும் கடையில வாங்கிக் கொண்டு போடுவான், அதில முக்கியமான பகுதிகள் அவனே வாசிச்சி வெளக்கு வான். மூக்கடச்ச கொரல்ல அவன் இழுத்திழுத்து வாசிக்கிறது கேக்க நல்லாருக்கும். இவன் கிட்ட துணிதைக்குன்னு பல ஊர்கள்ல இருந்தும் எளவட்டங்க வருவானுக. அவனுகள்ல பலரும் இவனுக்குச் சீடனாயிட்டானுக ஞாயிற்றுக்கிழமைகள்ல இவன் தையல் கட நெரம்பி வழியும்......... ஆனா இவன் எம்மேக்காரனையும் பேச்சில மடக்கிடுவான்''

கழகம் வளர்ந்த கதை — ஓர் ஒளிக்கீற்றாக இந்நிகழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது

தொகுப்பு - பட்டி. சு. செங்குட்டுவன்.

---




## பல்கலை கழகங்களுக்கு இனி முதல்வரே வேந்தர்

தமிழ்நாட்டில் உள்ள 13 பல்கலைகழகங்களுக்கும் கவர்னருக்கு பதில் முதன் மந்திரியே வேந்தராக இருக்கும் வகை செய்யும் சட்ட நகல் (மசோதா) தமிழக சட்டசபையில் கடந்த சனவரி திங்களில் தாக்கல் செய்யப்பட்டது.

## நம்மவர்களுக்கு

காஞ்சிப்பெரியவரின் இறுதிச் சடங்கின் போது பஜனை செய்ய வும்; மறைஓதவும், அபிஷேகம் செய்யவும் அவர்களுக்கு மட்டும்தான் அனுமதிநம் தமிழர்களுக்கு அனுமதி கிடைத்தது. எதற்கு? கூட்டத் தைக் கட்டுப்படுத்தசவுக்கு கழி கட்டவும், பெரியவரின் உடல் அடக் த்திற்கு சவக்குழிவும் வெட்டதான். ரிக், யஜுர், சாம, அதர்வண மெல்லாம் அவர்களுக்கு. கடப்பாரை, சம்மட்டி, மண்வெட்டி இவையெல்லாம் நம்மவர்களுக்கு'

நன்றி - நக்கீரன்

## 69 சதவிகித, இடஒதுக்கீடு சட்டம் - தமிழக சட்டசபை நிறைவேற்றியது

டிசம்பர் திங்கள் தமிழக சட்டமன்றம் ஓர் புதிய வரலாற்றைப் படைத்தது! இது வரை சுமார் 70 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் இட ஒதுக்கீடு வெறும் அரசு ஆணைகள் மூலமாகவே செயல்பட்டு வந்தது. 30-12-93 அன்று சட்ட மன்றத்தில் தமிழக முதல்வரால் தாக்கல் செய் யப்பட்டு அனைவரும் ஒருமித்து நிறை வேற்றிய தனி சட்டம், சட்டம் மூலம் இட ஒதுக்கீட்டினை உறுதி செய்வதாக அமைந்தது.

## பாட்னாவில் இந்துக்கள் புத்தமதத்தைத் தழுவினர்

பீகார் மாநிலம் பாட்னாவில் பல்லாயிரக்கணக்கான தாழ்த்தப் பட்ட மக்கள் பிறவிப்பேதம் கற்பிக்கும் இந்து மதத்துக்கு முழுக்குப் போட்டு புத்த மார்க்கம் தழுவினார்கள்.

இந்து மத மாற்றத்துக்கு ஏற்பாடு செய்தவர் பிகார் மாநில காவல்துறை அதிகாரி (டி.ஜி.பி.) மைகுராம் ஆவார். இந்து மதத் துக்கு முழுக்குப்போட்டது பற்றி செய்தியாளர்களிடம் அவர் கூறி யவை:

''2500 ஆண்டுகளுக்கு முன் எங்கள் மூதாதையர் பவுத்தர்களாகத் தான் இருந்தனர். இப்பொழுதும் நாங்கள் இந்துக்கள் அல்ல; இந்து இந்துக்களின் அடிமைகள், நாங்கள் எங்களின் மூதாதையர் மதத்துக்கு மாறுவதால் மேல்ஜாதி, கீழ்ஜாதி என்ற கொடுமையிலிருந் தும், ஆண் - பெண் என்கிற ஆதிக்கப் போராட்டத்திலிருந்தும் விடுபடு கிறோம்'' என்று குறிப்பிட்டார்.

இவர்கள் புத்த மார்க்கத்துக்கு மாறும்போது டாக்டர் அம்பேத்கர்

எடுத்துக்கொண்டது போன்ற உறுதிமொழிகளை எடுத்துக்கொண்டார்கள்.

✳ பிரம்மா, மகாவிஷ்ணு, சிவன் யாரையும் கடவுள்களாக ஏற்க மாட்டோம்.

✳ கடவுள் அவதாரம் எடுத்ததாகக் கூறுவதை ஏற்கமாட்டோம்.

✳ புத்தர் மகாவிஷ்ணுவின் அவதாரம் என்பது பைத்தியக்காரத்தனம்.

✳ இறுதிச் சடங்குகளில் இந்து மத சம்பிரதாயங்களைப் பின்பற்ற மாட்டோம்.

✳ வருணாசிரம தர்மத்தை ஏற்கமாட்டோம் என்பதுபோன்ற உறுதி மொழிகளை எடுத்துக்கொண்டனர்.

பீகாரில் இந்து மதத்துக்கு முழுக்குப் போட்டு புத்த மார்க்கத்துக்கு மாறிய நிகழ்ச்சி பெரிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது வட இந்தியாவில் காகர் என்ற பழங்குடி மக்கள் இரண்டு கோடி பேர்கள் அனைவரும் விரைவில் இந்துமதத்தை உதறிவிட்டு புத்தமார்க்கம் செல்வார்கள் என்று பீகார் மாநில புத்தமத சங்கத்தலைவர் சுபோத் கபூர் கூறியுள்ளார்.

பாரதிய ஜனதா, சங் பரிவாரங்கள் இந்து மதத்திற்குப் புத்துயிர் ஊட்டுவதாகக் கூறிக்கொண்டு அலைகிறார்கள். ஆனால் வடஇந்தியாவில் மற்றொரு பக்கம் கோடிக்கணக்கான மக்கள் இந்து மதத்துக்கு முழுக்குப்போடப் போகிறார்கள். இது சங்கராச்சாரிகளையும் சங் பரிவாரங்களையும் அதிர்ச்சி அடையச் செய்துள்ளது.

— விடுதலை
ஞாயிறு மலர்

---

### மன்சூர் அலிகான் கண்டனம்

# தமிழ்ப் படங்களுக்கு ஆங்கில பெயர் சூட்டுவதா?

சென்னை, ஜனவரி 3— தமிழ்ப்படங்களுக்கு ஆங்கிலத்தில் பெயர் சூட்டுவதற்கு - நடிகர் மன்சூர் அலிகான் கண்டனம் தெரிவித்துள்ளசர் இதுமற்றி அவர் விடுத்துள்ள அறிக்கையில்.....

தமிழ் படத்துறை எதை நோக்கிச்செல்கிறது என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை. முழுக்க முழுக்க ஆங்கில மோகத்தில் ஆழிந்து கொண்டிருக்கிறது. "மம்மி மம்மி", "மைடியர் சன்", "ஜய் லவ் இந்தியா", "மேப்ளவர்", லவ் ஸ்டோரி", "டுயட்", ஜென்டில் மேன்" இப்படியாக படத்தின் பெயர்கள் போகிறது. என்ன இவர்கள் அமெரிக்காவில் வாழும் ஆங்கிலப் பரம்பரைகளுக்கா படமெடுக்கிறார் கள்? ஹாலிவுட் தகுதிக்கு படமெடுக்கிறேன் என்று செல்லிக்கொண்டு அரைவேக்காடு ஆங்கிலத்தில் தமிழ் அளவுக்கு வளர்ச்சியடையாத இலக்கண இலக்கியத்தில் ஆங்கிலத்தில் படப்பெயர் வைத்து மகிழ்ந்து கொள்கிறார்கள்.

"ஏர்போர்ட்", "டுயட்", "கேப்டன் மகள்" என்றேல்லாம் பெயர் சூட்டுகிறார்கள். குறைத்தபட்சம் தமிழை இழிவுபடுத்தாமலா வது இருக்கலாம் அல்லவா? எந்த ஆங்கிலப் படத்திற்காவது தமிழில் பெயர் வைக்கிறார்களா? எந்த பணவுதவி செய்பவர்கள் ஆங்கிலத்தில் பெயர் வைத்தால் தான் பணம் தருவேன் என்று செல்கிறார்கள்? தயவு செய்து தமிழை அடகு வைக்கவேண்டாம்.

— இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

— விடுதலை

# இவன்தான் தமிழன் இது தான் தமிழ்நாடு

'சுரணையற்ற தமிழரும் சுரணையுள்ள வங்காளியும்' எனும் கட்டுரையைப் படித்தபோது "தேசியவாதி என்றாலே என் அகராதிப் படி இனத்துரோகி என்பது தான் பொருள்" எனும் பெரியாரின் கருத்தே நினைவிற்கு வந்தது. தமிழகத்தின் இன்றைய இழிநிலை யைக் கட்டுரையாசிரியர் தெளிவாக விளக்கியுள்ளார்.

தமிழ்நாட்டில் இன, மொழி உணர்வுகள் 1968 வரையில் சரியான வழியிலே வளர்ச்சியடைந்து வந்தன. அரசியல்வாதிகள் பதவிக்கு வந் ததும் தமிழ் மக்களிடையே இவற்றை வளர்ப்பதற்கு மறந்துவிட்டார் கள். கி.வீ.ரமணி, ப.நெடுமாறன், வை.கோ. போன்றோர் தமிழ்இன உணர்வைப் பற்றிப் பேசினால் அவர்களைத் தேசத்துரோகிகள் என்று இங்குள்ள தமிழனே கூறுகிறானே. ஆனால் வங்காளியும் மலையாளி யும் இன, மொழி உணர்வுகளைப் பற்றிப் பேசினால் அது தேசப் பற்றாகி விடுகிறது. இந்த உண்மையைக்கட்டுரை நன்கு விளக்கி யுள்ளது.

1960-ல் எகிப்தில் நடந்த பன்னாட்டுப்பட விழாவிலேயே நடிகர் திலகத்திற்குச் சிறந்த நடிகர் என்ற விருது வழங்கப்பட்டுவிட்டது.

ஆயினும் அவர் தமிழன் என்பதாலேயே இன்றுவரை இந்திய அரசின் 'கலை விருதுகள்' அவருக்குத் தரப்படவில்லை. காஷ்மீரிலும் பஞ்சாபிலும் தீவிரவாதிகளைப் 'போராளிகள்' என்றழைக்கும் தொலைக்காட்சி, தமிழகத்தில் அவர்களைப் பயங்கரவாதிகள் என்று கூறுகின்றது ஆகவே தமிழன் என்றாலே தில்லிக்கு வேம்பாய்க் கசக்கிறது.

மேற்கு வங்க அரசு இப்போதும் மட்டுமல்ல எப்போதும் இன உணர்வுடனேயே செயல்பட்டு வருகின்றது. வங்கப் போர் நடந்தபோது, அன்றைய மேற்கு வங்க முதலமைச்சர், "இந்திய அரசு ராணுவத்தை அனுப்பிவங்க மக்களைக் காப்பாற்றத் தவறுவோமானால் மேற்கு வங்கத்தின் காவல் துறையை வங்க தேசத்திற்குள் அனுப்பி எங்கள் வங்க இன மக்களை நாங்கள் காப்பாற்றுவோம் என்று மைய அரசை எச்சரிக்கை செய்ததை நாம் நினைவில் கொள்ள வெண்டும். எல்லைக்கோடுகள் குறுக்கே இருந்தாலும் தங்கள் இன மக்கள் கொள்ளப்படுவதை எந்த வங்காளியும் ஏற்றுக்கொள்ளவில்லை.

தமிழன் இதற்கு விதிவிலக்கு உள்நாட்டிலேயே தமிழர்கள் அகதிகளாக அடித்துத் துரத்தப்பட்ட போதுகூட இங்கு 'அமைதிப்பூங்கா' வசனம் பேசிக்கொண்டிருந்தார்கள். தமிழகத்தில் இன உணர்வும் மொழி உணர்வும் இல்லாமற் போனமைக்குப் பெரியார், அண்ணா போன்ற தன்மானமிக்க தலைவர்கள் இல்லாமையே காரணம் எனலாம். மேலும் கேரளத்தோடும் மேற்கு வங்கத்தோடும் ஒப்பிடும் போது தமிழ்நாட்டில் தற்குறிகளின் எண்ணிக்கை அதிகம்! சிம்பொனி இசையமைத்துத் தமிழகத்துக்குப் பெருமை சேர்த்த இளையராஜாவைத் தமிழ் நாட்டில் ஒரிருவரைத்தவிரவேறு எவர் மனந்திறந்து பாராட்டினார்கள்? மாநிலங்களவையில் இளையராஜாவைப் பாராட்டிப் பேசியவர் வை.கோ. ஒருவர் தான்.

— ப. காளிமுத்து, பழனி
10·1·94 தினமணி.

---

# பூரிசங்கராச்சாரியோடு பெண்கள் நேரடி மோதல்

கல்கத்தா, ஜன. 20— பெண்களுக்கு வேதம் ஓதும் உரிமை கிடையாது என்று கூறிய பூரிசங்கரச்சாரிக்கு கல்கத்தாவில் பெண்கள்

கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். பூரிசங்கராச்சாரி பேசிய ஒரு நிகழ்ச்சியில் - அவருக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்; சங்கராச்சாரி

நடத்திய செய்தியாளர் கூட்டத்துக்குள் நுழைந்து- நேருக்கு நேராக கேள்விகள் கேட்டனர்.

கல்கத்தா வந்திருந்த பூரிசங்கராச்சாரி - கடந்த செவ்வாய்க் கிழமை கடுமையான பெண்கள் எதிர்ப்பை சந்தித்தார். 'பிரகதிஷி மகிளா சமதி' எனும் அமைப்பைச் சார்ந்த பெண்கள் - பூரிசங்காச்சரியின் பார்ப்பன ஆணவத்தை எதிர்த்து போர்க்கொடி உயர்த்தினர். திங்கள் கிழமை - பூரிசங்கராச்சாரி கலந்துகொண்ட ஒரு நிகழ்ச்சியில் - ஒருபெண் வேத மந்திரம் கூறியபோது-பூரிசங்கராச்சாரி அதைத் தடுத்தார்; பெண்களுக்கு வேதம் ஓத உரிமை கிடையாது என்று கூறினார்; இந்த செய்தியை அறிந்த 'பிரகதிஷி மகிளா சமிதி' என்ற அமைப்பைச் சார்ந்த பெண்கள் செவ்வாய்க்கிழமை பூரிசங்கராச்சாரி பேசிய-மாநாட்டுக்கு சென்றனர்; பூரிசங்கராச்சாரியை எதிர்த்து முழக்கங்களை எழுப்பினர்.

பின்னர் பூரிசங்கராச்சாரி பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளித்தார்; அப்போது பெண்கள் அந்த அறைக்குள் வலுகட்டாயமாக நுழைந்தனர்; பூரிசங்கராச்சாரி அதிர்ச்சி அடைந்தார்; அவரிடம் பெண்கள் நேராகவே கேள்விகளைக் கேட்டனர்; கடுமையான வாதங்கள் நடந்தன; ஒரு கட்டத்தில் பதில் சொல்ல முடியாமல் - ஆத்திரமடைந்த பூரிசங்கராச்சாரி - பெண்களை வெளியேறுமாறு கூச்சல் பே ட்டார். இந்த சம்பவம் கல்கத்தாவில் கடும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தி.மு.க. வின் சமுகநீதிப் பேரணி

சென்னை, ஜன. 20 — சமுகநீதிக் கோரிக்கையை வலியுத்தி வரும் 23-1-94 ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு சென்னை தியாகராயர் நகர், பனகல் பூங்கா அருகிலிருந்து மாபெரும் தி.மு கழகப் பேரணி புறப்பட்டு, சென்னை தியாகராயர் சாலை (பாண்டிபஜார்), எல்டாம்ஸ் சாலை (தேனாம்பேட்டை), டி.டி கே. சாலை (மவுபரிஸ் சாலை), டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை வழியாக கடற்கரை காந்தி சிலை அருகே நடைபெறும் மாபெரும் பொதுக்கூட்டத்திடலை வந்தடையும்.

அங்கே நுட்பமிகு நுழைவாயில், அலங்கார வளைவுகள், கண்கவரும் வண்ண வண்ண விளக்குகள், உதயசூரியனின் எழிற்கோலம், காண்போரைக் கவரும் வண்ணம் தி.மு.கழகத்தின் இருவண்ணக்

கொடி - தோரணங்கள் இவையெல்லாம் பேரணியின் மாண்பினை எடுத்துரைக்க — அதன் நடுவே, வரலாற்றிலேயே கண்டிராத வகையில் விண்முட்டும் வியப்புமிகு மேடை - அதிலே சமூகநீதிப் பாதுகாவலர் டாக்டர் கலைஞர் அவர்களின் எழுச்சிமிகு உரையுடன் தி.மு.க. பொதுச்செயலாளர் பேராசிரியர், தி.மு.க. பொருளாளர் சாதிக், துணைப் பொதுசெயலாளர்கள் நாஞ்சிலார், ஆற்காடு நா. வீராசாமி மற்றும் தி.மு.கழக தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட, மாநகர, மாநிலக் கழகச் செயலாளர்கள் உள்பட கழக முன்னனியினர் பலரும் உரை நிகழ்த்துகிறார்கள்.

பேரணியின் துவக்கத்தில் 250 மோட்டார் சைக்கிள்களில் சிருடையுடன் தி.மு.க. இளைஞரணித் தோழர்கள் அணிவகுக்க, 50 குதிரைகளில் தி.மு.கழகக் கொடியுடன், தி.மு கழகச் செயல்வீரர்களின் அணிவகுப்பு நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து சமூநீதிக்காகப் போராடிய திராவிட இயக்கக் காவலர்கள் குறித்தும், போராட்ட வரலாறு குறிக்கும் தென் சென்னை - வட சென்னை மாவட்டங்களில் அடங்கிய அனைத்துப் பகுதிகளிலிருந்தும் அலங்கரிக்கப்பட்டுவரும் அலங்கார டிரக்குகளின் அணிவகுப்பு நடக்கும்.

அடுத்து, பேண்ட் வாத்தியம் முழங்க தி.மு.க. இளைஞரணிச் செயலாளர் மு.க. ஸ்டாலின் அவர்களுடன் சிறப்புப் பயிற்சி பெற்ற இளைஞரணி வெண்சீருடை வீரர்களின் அணிவகுப்பும் -

அடுத்து சிறப்புப் பயிற்சி பெற்ற தென் சென்னை மாவட்ட இளைஞரணியினரின் வெணசீருடை அணிவகுப்பும் -

தொடர்ந்து மாவட்ட வாரியாக இளைஞரணியினர் அந்தந்த மாவட்ட அமைப்பாளர் தலைமையில் வெண்சீருடையுடன் அணிவகுத்துவர, திருமதி எஸ்-பி சற்குணம் தலைமையில் தி.மு.க. மகளிரணி அணிவகுப்பு, திருச்சி என். சிவா தலைமயில் தி.மு.க. மாணவரணி அணிவகுப்பு, செ. குப்புசாமி தலைமையில் தி.மு.க. 'தொழிலாளரணி அணிவகுப்பு என்.வி.என். சோமு தலைமையில் தி.மு.க. வழக்கறிஞர் அணி அணிவகுப்பு, டாக்டர் மு. தமிழ்க்குடிமகன், டாக்டர் க. காளிமுத்து ஆகியோர் தலைமையில் தி.மு.க. இலக்கிய அணி அணிவகுப்பு, 'மீசா' ஆர். கணேசன் தலைமையில் தொண்டரணி அணிவகுப்புகள் நடைபெறும்.

இந்த அணிவகுப்புகளைத் தொடர்ந்து வடசென்னை, தென் சென்னை, செங்கை அண்ணா (எம்.ஜி.ஆர்) வடக்கு, செங்கை

(தொடர்ச்சி கடைசி பக்கம் பார்க்க.)

# பெரியார் திடலில் தமிழ் இசை விழா

தந்தை பெரியார் தமிழ் இசை மன்றத்தின் இசைவிழா பெரியார் திடலில் 19 - 1 - 94 முதல் 25 - 1 - 94 வரை நடைபெற்றது 19-1-94 புதன் மாலை 6 : 30 மணிக்கு இசைத் தென்றல் புட்பவனம் குப்புசாமி அவர்களின் இசைநிகழ்ச்சி, தஞ்சை தமிழ்ப் பல்கலைகழகத்தின் துணைவேந்தர் டாக்டர் ஔவை நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 20 - 1 - 94 அன்று மாலை டாக்டர். சீர்காழி சிவ சிதம்பரம் அவர்களின் இசை நிகழ்ச்சி திருமதி. திலகவதி இ.கா.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

21 - 1 - 94 மாலை கலை மாமணி கரிகோல்ராஜ் அவர்களின் நடிப்பிசைப் புலவர் நாடக மன்றத்தின் பேரறிஞர் அண்ணாவின் 'நீதிதேவன் மயக்கம்' நாடகம், நடிகமணி டி.வி. நாராயணசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

22 - 1 - 94 காலை 10 மணியளவில் தமிழிசை ஆய்வு கருத்தரங்கம் திருப்பாம்புரம் சண்முகசுந்தரம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது பொறியாளர் ப. தண்டபாணி, கவிஞர் புரட்சிதாசன், முனைவர் இரா. மதிவாணன், இசைக்கலைமணி பி டி. செல்வதுரை ஆகியோர் கருத்தரங்கத்தில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினர் மாலை தமிழிசைச் செல்வர் கழுகுமலை கந்தசாமி அவர்களின் இசை நிகழ்ச்சி இயக்குநர் மணிவண்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இசை சித்தர் சிதம்பரம் ஜெயராமன், முழவிக்கலைஞர்கள் திரு. கே.எம். இராமசாமி, திரு. இராமநாதன் ஆகிய மூத்த கலைஞர்களுக்கு சிறப்பு செய்து பாராட்டுரை வழங்கினார் தமிழினப் பேரொளி மானமிகு. கி. வீரமணி அவர்கள், 23 - 1 - 94 அன்று மாலை தமிழிசைப் பாணர் தாராசுரம் சுந்தராசன் அவர்களின் இசை நிகழ்ச்சி சிற்பகலா நிதி கணபதி ஸ்தபதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 24 - 1 - 94 மாலை சேலம் ஜெயலட்சுமி அவர்களின் இசை நிகழ்ச்சி டாக்டர். சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 25 - 1 - 94 மாலை தமிழிசைப் பாணர் டி.கே.எஸ் கலைவாணன் அவர்களின் இசை நிகழ்ச்சி திரைப்பட நடிகர் 'இனமுரசு' சத்யராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தந்தை பெரியார் தமிழ் இசை மன்றப்புரவலர் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் தமிழினத் தளபதி மானமிகு கி. வீரமணி அவர்கள் அனைத்து நாள் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு இசைவாணர்களுக்கு விருதுகள் வழங்கி சிறப்பித்தார்கள்.

தந்தை பெரியார் தமிழிசை மன்ற அமைப்பாளர்கள் வள்ளல், ந. அருணாசலம் கலைமாணி கவிஞர் ந. மா. முத்துக்கூத்தன் திரு. அ. சௌரிராசன், திரு. மு. கலைவாணன் ஆகியோர் நிகழ்ச்சிகளை சிறப்புற ஏற்பாடு செய்து அனைவரையும் அன்போடு வரவேற்றனர்.

---

# படிப்பகம்

**மழலை முத்துக்கள் (கவிதை)**

இயற்றியவர் கவிஞர் க. அ பிரகாசம் சிறுவர், சிறுமியருக்காக எழுதப்பட்டது இந்த நூல். சிறுபிள்ளைகளுக்கு வேண்டிய நல்ல கருத்துக்களை மிகவும் எளிய நடையில் தந்திருக்கிறார். வளரும் பயிருக்கு நல்ல உரம் இந்த நூல் 'மழலை முத்துக்கள்'

விலை. உருபா 16-00

வெளியீடு, விற்பனை: பைந்தமிழ் பதிப்பகம்
நெ.21 காங்கயம் சாலை
கொடுமுடி. 638151
பெரியார் மாவட்டம்

**உள் மனப்பூக்கள் (கவிதை)**

இயற்றியவர் கவிஞர் க அ. பிரகாசம் நல்லதொரு கவிதைத் தொகுப்பு. அனைவரும் படித்து மகிழ வேண்டிய ஒரு நூல். 'உள் மனப் பூக்கள்' (கவிதைகள்)

விலை. உருபா 20-00
வெளியீடு - விற்பனை
பைந்தமிழ் பதிப்பகம்
21 காங்கயம் சாலை
கொடுமுடி 638151
பெரியார் மாவட்டம்.

JL
M24, N92 K4
N94.1

---

## தமிழஞ்சலி

அன்னைத் தமிழை அரியாசனம் ஏற்றியவர்; தன் தாய்நாட்டிற்கு தமிழ் நாடென்று பெயர் சூட்டிய தமிழ்த்தாயின் தலைமகன் பேரறிஞர் அண்ணா பற்றி புலவர். கலைமணி படைத்திருக்கும் படைப்பிலக்கியமே 'தமிழஞ்சலி'. எழுதியவர் தொடக்கத்திலேயே சாகும்போது அண்ணா புகழ்பாடி சாகவேண்டும் — என் சம்பலும் அவர் புகழ்



217217
சென்னை-600 008

மணத்து வேக வேண்டும் என்று சொல்ல தனக்கு அண்ணாவிடம் உள்ள ஈடுபாட்டை அறிவித்துவிடுகிறார் அதே எண்ணத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் என்னை இதற்கு முன்னுரை எழுதச் சொன்ன ஆசிரியருக்கு என் நன்றி.

அண்ணா ஒரு காலம். அண்ணா ஒரு நீர்வீழ்ச்சி, அண்ணா ஒரு வானவில், அண்ணா ஒரு ஜனநாயகம், அண்ணா ஒரு கடல், அண்ணா ஒரு தமிழ்ப்பூமாலை, அண்ணா ஒரு தென்றல், அண்ணா ஒரு கதிரவன், அண்ணா ஒரு நிலா, அண்ணா ஒரு குமிழி, அண்ணா ஒரு தொடு வானம், என வெவ்வேறு தலைப்புகளில் தன் பாட்டுடைத் தலைவனின் குண நலன்களை படைத்து மகிழ்கிறார்; மகிழ்விக்கிறார். இந்த இலக்கியத்திற்கு முன்னுரை எழுதுவது மிகமிகக் கடினம். ஆம், இந்தப் படைப்பிலக்கியத்தின் ஒவ்வொரு எழுத்துக்கும முன்னுரை எழுத வேண்டும்! முடிகிற காரியமா அது ஆனால் சுவைத்தவன் ஒரிரு சுவைகளைச் சொல்லித்தான் ஆகவேண்டும். ...'நீர்வீழ்ச்சி' 'என்னைக் குடி என்றது அண்ணாவைக் குடித்தவன் தாகம் தனிக்கப்படுகிறான்! 'தென்னகத்தின் பேரறிவைக் கவனி அமைதிக்கு அடைக்கலம் தந்து — அரசியலுக்கு புத்துருவம் அளித்தவர்' - 'குறள் படித்த இந்த மூதறிஞன் விரல் தொட்ட இடமெல்லாம் இலக்கியத்தின் விளக்கங்கள் 'கொந்தளிக்கும் கடலிலிருந்து மீன்சாரத்தை எடுத்துக் கொள்ள முயற்சித்துக் கொள்ள வேண்டுமே தவிர, கரிக்கிறதே கடலென்று கருதி — கடல் மீது போர் தொடுக்கக் கூடாது!

அண்ணாவின் அறிவுரைகளிலிருந்து நாட்டுககுரிய நல்லவன வற்றை எடுத்துக் கொள்ள வேண்டுமே — யன்றி, அவர் கட்சித் தலைவர் என்பதற்காகப் - புறக்கணிக்கக் கூடாது; அது புத்திசாலித்தனமுமல்ல!

'அண்ணா விதையாக இருந்து - அவரே விருட்சமாக ஆனவர்'

வானமாக இருந்து — தொடுவானாக வளைந்தவர். வரியாக இருந்து வரலாறாக முடிந்தவர். ஒளித்துளியாக இருந்து ஓசையாக லயம் கலந்தவர். ஒளிக்கொழுந்தாக இருந்து பிழம்பு நுனியின் வருடலாக நீண்டவர்.

துளியாக இருந்து பிரளயமாகப் புரண்டவர்!

'அண்ணாமேலேயே இருப்பவர்களுக்கு இரகசியங்களைக் கூறியதில்லை.

கீழே, புல்லாக - பூண்டாக கிடப்பவர்களுக்கு நுணுக்கமான விஷயங்களை அறிவித்தவர்'.

'பேச்சா? எழுத்தா? நாடகமா? உரையாடலா? அன்பா? பண்பா? அரசியலா? அவரது அழகான தமிழா? அற்புதமான ஆங்கிலமா?

எல்லாத் துறையிலும் ஒரு மனிதனை நினைக்கிற நேரத்தில், நமக்கு ஞாபகம் வருகிறதென்றால் - இதற்குப் பெயர் தான் என்ன?

சர்வ வல்லமையா'

இவை சில துளிகள். ஆம் அத்தனையும் அமுதம். இப்படி அண்ணாவை அணு அணுவாய் ஆய்ந்து எழுதிய ஆசிரியர் அதற்கான தனக்குள்ள தகுதிப்பற்றியும் உரைக்கிறார், இப்படி!

'என்னைப்போல், இன்பத்துன்பங்களைக் கவனியாமல் அண்ணாவை நெருங்கிப் பார்த்தாலொழிய, இந்தப்பேருண்மைகளைக் காணமுடியாது' என்கிறார். தன் தலைவனிடம் தனக்குள்ள காதலை வெளியிடுகிறார் ஆசிரியர்,

நாள்தோறும், நான் கடற்காற்று வாங்க கடற்கரைக்குப் போகும் போது கடலைக்காண்கின்றேன். அப்போது அறிஞர் அண்ணா எனது இதயத்திரை அரங்கிலே தோன்றுவதையும் காண்கின்றேன்'.

இதே உணர்வைப் பெறுகிறவன் நானும்; இந்தத்தமிழஞ்சலியை படித்தபோது எனக்கு பொறாமை, ஏற்பட்டது நண்பர் கலைமணியின் ஆம் என்னால் என் தந்தைக்கு, என் தலைவனுக்கு இப்படியொன்றை பார்க்க முடியவில்லையே என்று!

உடன்பிறவா சகோதரர் புலவர் கலைமணியை நெஞ்சார வாழ்த்துகிறேன், என் தந்தையையும், தமிழன்னையையும் வணங்கி!

---



## தமிழ்த்துணை

தமிழ் உமது முரசாக ஆகட்டும், பண்பாடு உமது கவசமாக ஆகட்டும் அறிவு உமது படைக்கலனாக ஆகட்டும் அறநெறி உமது வழித்துணையாகட்டும் இவை அனைத்துக்கும் தமிழ் துணை செய்யும்.

— பேரறிஞர் அண்ணா

# மடல்கள்

காஞ்சிபுரம்
13 - 9 - 93

பெருமதிப்பிற்குரிய ''காஞ்சி நாடு'' சிறப்பாசிரியர் அவர்களுக்கு,

காஞ்சிபுரத்தின் அண்ணா பற்றாளர்களில் ஒருவனான பா. முரளி தரன் எழுதும் கடிதம். எவ்வித லாப நோக்கும் இல்லாமல் அண்ணா வின் புகழை, ஐயாவின் சிந்தனைகளை நிலைபெற செய்ய வேண்டும் என்ற ஒரே சிந்தனையோடு தாங்கள் ''காஞ்சி நாடு'' திங்கள் இதழை துவக்கியுள்ளதை நினைத்தால் பாராட்டச் சொற்கள் கிடைத்திலது. இன்றைய நிலையில் தமிழகத்திற்கு இதுபோன்ற இதழ்களே அவசிய மாகிறது.

பல போராட்டங்களிடையே — போர்களினிடையே உரோம் எனும் சிறு நகரைக் காப்பாற்றி அதை பெரிய சாம்ராஜ்யமாக ஆக்கின ராம் அந்நாளைய உரோம் வாழ் பெருவீரர்கள். போரிட்டு, போராடி - வாராது போல் வந்த மாமணியாய் கிடைத்த உரோம அரசை அப் பெரு வீரர் பின் வந்த கோமான்கள் கோலாகலக் கூத்துகளால் - கோமாளித்தனமான செயல்களால் - கேளிக்கைகளால் சிதைத்து சீர ழித்துவிட்ட செய்தியை சரித்திரம் நமக்கு செப்புகிறது. ஆரியர்தம் பாரத விந்தத்தில் தலை வைத்து இன்பம் கண்டுவந்த இந்த திராவி டத்தை எழுத்தால் — பேச்சால் - எண்ணியதை எண்ணியாங்கு செய்து முடித்த செயலால் — சீரமைத்து - சீர்கொடுத்து — சிங்காரத்தமிழ், நடை போட சீரான பாதையை சிறப்போடு அமைத்து தந்தவர்கள் தாம் ஐயாவும், அண்ணாவும். திராவிட இயக்கங்களால் சனாதனிகள் கீழ் கிடந்த ''மதராஸை'' - ''தமிழ்நாடாய்'' ஆக்கிக்காட்டியவர்கள் தாம் ஐயாவும், அண்ணாவும். ஆனால் இன்று......

ஆனால் இன்று அவர்களின் புகழ் வேண்டுமென்றே மறக்கடிக்கப் படுகின்றன ஐயாவும், அண்ணாவும் அவர்ளின் பிறந்த தினங்களில் மட்டும்தான் நினைக்கிறார்கள். இதைவிட அவமானம் என்னைப் போன்ற காஞ்சிபுரத்துக்காரனுக்கு மட்டுமல்ல தமிழ்நாட்டுக்கே நேர்ந்திலது.

பூங்காவில் அன்று அண்ணவால் துவக்கப்பட்ட இயக்கம் இன்று பாலைவனத்தை நோக்கி செல்கிறது. முன்னோடிகளை நினைத்துப் பார்க்காத மிலேச்சகு ணம் கொண்ட கூட்டமாகவா நம்மை அண்ணா வளர்த்தார்?.

''எனக்கு தலைவர், என்றென்றும் ஐயா அவர்கள்தான்''. என்று சொன்ன அண்ணா அரசியல் நாகரீகம் உடையவர். அவரின் தம்பி

களாய் தங்களைக் கூறிக்கொள்வோர் அவரைப் போல நடக்க வேண்டாமா? போகட்டும்.

அவர்களால் அண்ணாவாய் ஆக முடியாது.

''வசவாளர் வாழ்க'' என்று எதிரிகளை மன்னிக்க முடியாது.

''தம்பி வா! தலைமை ஏற்க வா!'' என்று அடுத்தவரை வளர்க்க முடியாது.

''நல்லதம்பி'' என்று தோழர்களை பாசத்தோடு அழைக்க முடியாது.

ஏனென்றால்,

அவர்களால் அண்ணாவாய் ஆக முடியாது.

காமராஜர் புகழை இந்திராகாந்தி மறைக்க முயன்றதால் காந்தியின் காங்கிரஸ் உடைந்தது.

லெனின் புகழை ஸ்டாலின் மறைக்க முயன்றதால் இன்று சோவியத் அகிலத்தில் கம்யூனிஸம் மறைந்தது.

அண்ணாவின் புகழை மறைக்க முயன்றதால் இன்று இயக்கத்தில் பாசம் மறைந்தது.

ஆனால், அண்ணாவின் புகழை யாராலும் மறைக்க முடியாது ஏனெனில், ''ஆயிரம் கரங்கள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை''.

அலைகடலோரம் அண்ணா உறக்கம் கொண்டாலும் அன்புத் தோழர்கள் நெஞ்சிலிருந்து மறைவதில்லை. ஆனால் தலைவர்களது மனப்பான்மையால்...... உரோம சாம்ராஜ்யம் வீழ்கிறது......

இங்ஙனம்,
பா. முரளிதரன் (BSc)
2. குறுக்கு தெருவு
சின்னக் காஞ்சிபுரம்
காஞ்சிபுரம்

4-12-93

திரு. திருமதி. பரிமளம் அவர்கட்கு.
பேரன்புமிக்க பெருந்தகையீர்.

தங்களின் குழந்தையின் திருமணஅழைப்பு உரிய காலத்தில் கிடைத்து மகிழ்ந்தோம் சந்தர்ப்பம் கிட்டினால் கலந்து கொள்ள ஆவலுடன் இருந்தோம். ஆனால் அதற்கான சூழ்நிலை கிட்டவில்லை. எப்படியும் நேரில் ஒருவரை சந்திக்க வைக்கவேண்டும் என்கிற ஆவலில் ''வாழ்த்துச் செய்தியை''யும் அனுப்பவில்லை. அதற்கான வாய்ப்பு இப்போதுதான் கிட்டியது. திரு. தியாகராங்கன் எமது உறவினர். அவர் எமது குடும்ப சார்பில் வாழ்த்துத் தெரிவித்து அன்புப்பரிசு வழங்குவார், பெற்றிடவும்.

அறிஞர் அண்ணாவின் அன்பும் அறிவும் மக்கள் மத்தியில் நிலைத்திட தங்கள் சேவை அளப்பரியது - வாழ்க்கையில் சிறுபகுதி செலவிடுங்கள். அது அண்ணாவுக்கும் மனித குலத்திற்கும் பொன்போன்றத் தங்களின் அமைப்பின் சேவையில்தான் அண்ணா காலத்து கருத்தையும், குடும்ப ஒருமைப்பாட்டையும் காணமுடிகிறது. ஏனைய அமைப்புகள் 'தொழில்'' நடத்துகிறார்கள். 'நாடு' இதழ் இடையிடை பெறமுடிகிறது. நீங்கள் அனுப்ப வேண்டாம். கிடைக்கும்போது இங்கு வாங்குவேன் அல்லது, அங்கு இருந்துவரும் நண்பர்கள் மூலம் பெற்றிடுவேன். எமது நாட்டு சூழ்நிலைகளினால் எமது எண்ணங்கள், ஆவல்கள் அடக்கிக் கொள்ள வேண்டியுள்ளது. எமது காலத்தில் இப்பிரச்சனைகள் தீர்க்கப்பட்டால் எமது பகுத்தறிவுப் பாதைக்கு இங்கு எதிர்காலம் உண்டு,

எல்லோர்க்கும் எங்கள் இனிய வாழ்த்துக்கள்,
என்றும் இனிய அன்புடன்
—வேலணை. நா. வீரசிங்கம்
ஈழம்

---



ஒரு மனிதன் தன்னிடத்தில் மற்றவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று நினைக்கிறானோ, எதிர்பார்க்கிறானோ அப்படியே இவன் மற்றவர்களிடமும் நடந்து கொள்ளுவதுதான் ஒழுக்கமாகும்.

—தந்தை பெரியார்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

## ANNA'S MASTERY OF ENGLISH

...What many of us who had been tought by our Tamil friends to appreciate the linguistic talents of Arignar Anna were not aware of. was his quite extraordinary mastery ot English Then came the Second International Conference - Seminar of Tamil Studies, at the concludiug session of which we were privileged to hear the Chief Minlster speak ih English After this, no delegate to the conference could fail to understand how he has gained such a following through his speeches in his mother tongue. For this was a great performance, mingiing humour with sentiment, wit with profundity in a way that no native speaker of English present on the occasion could have surpassed, or even equalled.

**Dr. A E. ASHER,**
University of Edinburgh, Scotland

---




# செய்திகள்

**அறந்தாங்கி** **நிர்வாகிகள்**

தலைவர் வின்சென்ட் இரா. இராசேந்திரன்
துணைத்தலைவர் இரா. தேவதாஸ்
செயலாளர் அ. இராசசேகர்
துணைச்செயலாளர் கூம்பள்ளம் நடராசன்
பொருளாளர் இ.பிச்சை முகமது
மற்றும் செயற்குழு 16 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வின்சென்ட்

நன்கொடை ரூ 3-00

பதிவு எண்: G6/TN/MS(C)1239

காஞ்சி

நாடு

(23-ம் பக்கத் தொடர்ச்சி)

அண்ணா (எம்.ஜி.ஆர்.) தெற்கு, வடஆற்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை சம்புவராயர், விழுப்புரம் எஸ் எஸ். ராமசாமி படையாட்சியார், கடலூர் வள்ளலார், கீழத் தஞ்சை (நாகை காயிதே மில்லத்), மேலத் தஞ்சை, திருச்சி, திருச்சி - அரியலூர், திருச்சி, - கரூர் புதுக்கோட்டை, சேலம் (வடக்கு), சேலம் (தெற்கு), தருமபுரி, கோவை, பெரியார், நீலகிரி, மதுரை - வைகை, மதுரை புறநகர், திண்டுக்கல் காயிதேமில்லத் (அண்ணா), இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன், காமராசர் நெல்லை கட்டபொம்மன், வ.உ. சிதம்பரனார், குமரி, கோவை மாநகரம், மதுரை மாநகரம் மற்றும் தி.மு.க. மாநில அமைப்புகளைச் சேர்ந்தோர் அந்தந்த மாவட்ட, மாநகர, மாநிலச் செயலாளர்கள் - பொறுப்பாளர்கள் - அமைப்பாளர்கள் தலைமையில் முறைப்படி அணிவகுத்து வருவர்.

இந்தப் பேரணிக்குப் பின்னால் வெளியூர்களிலிருந்து வரும் பேருந்துகள், வேன்கள் போன்ற வாகனங்கள் வரும்.

கொடி ஏந்திய கரங்களையும், கொள்கை முழக்கும் நெஞ்சங்களையும், டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை - இராயப்பேட்டை நெடுஞ்சலைச் சந்திப்பில் அமைக்கப்பட்டுள்ள தனி மேடையிலிருந்து டாக்டர் கலைஞர், இனமானப் பேராசிரியர் மற்றும் தி.மு.கழக முன்னணியினரும் பார்வையிடுவர்.

---

ஆசிரியர், வெளியிபவர் : மலர்வண்ணன் அண்ணாதுரை
7, அவின்யூ சாலை, சென்னை-34.
அச்சிடுபவர் : சி.ஆர். கண்ணன், அண்ணன் அச்சகம், சென்னை




பெறுநர் :

திரு / திருமதி

Director
Tamil Nadu Archives
Madras 8

விடுநர் :

பேரறிஞர் அண்ணா
இலக்கியப் பேரவை
7. அவின்யு சாலை,
சென்னை-600 034.
பேசி: 8278570